தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI   www.dhinakani.com   காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 263 | 4 Pages | 21.4.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 263 | 4 பக்கங்கள் | 21.4.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இலர்பல ராகிய காரணம் நோற்பார்**
**சிலர்பலர் நோலா தவர்**

**விளக்கம்:**
ஆற்றல் இல்லாதவர் பலராக உலகில் இருப்பதற்குக் காரணம் தவம் செய்கின்றவர் சிலராகவும், செய்யாதவர் பலராகவும் இருப்பதே ஆகும்.

# தி.மு.க. கூட்டணியில் பா.ம.க..? முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்

சென்னை, ஏப்.21

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான உறவில் கவர்னர் என்பவர் போஸ்ட்மேன் போன்றவர் தான். தற்போதைய சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பும் இதைத்தான் கூறியிருக்கிறது. தமிழ் மொழிக்கும், தமிழ்நாடு என்ற பெயருக்கும் எதிராக கவர்னர் செயல்படுகிறார். தன்னை ஒரு தீவிர பா.ஜ.க.காரராக கவர்னர் ஆர்.என்.ரவி காட்டிக்கொள்கிறார். பதவிக்காலம் முடிந்த பிறகும் கவர்னர் தமிழ்நாட்டில் உள்ளார்.



தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இணையப் போகிறது என்ற தகவலில் எந்த உண்மையும் இல்லை. தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வலுவாக உள்ளது. கூட்டணிக் கட்சிகளின் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களுக்கு மதிப்பளிக்கிறேன். அ.தி.மு.க. பா.ஜ.க. இடையே கள்ளக் கூட்டணி என ஏற்கெனவே கூறினேன்; தற்போது அது உண்மையாகியுள்ளது. அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியை 2 முறை தோற்கடித்துள்ளோம்; 2026 தேர்தலிலும் நிச்சயம் தோற்கடிப்போம்.

ஆட்சியை பிடிக்க விரும்பிய அ.தி.மு.க. தலைவர்கள், பா.ஜ.க.வின் விருப்பப்படி தமிழகத்தின் மீது நீட் தேர்வை திணித்தனர் . தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் இருக்கும் வரை நீட் தேர்வு நடத்தப்படவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கழக மகளிரணி சார்பில் மாலை தாராபுரம் அண்ணா சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

கழக மகளிரணி சார்பில் மாலை தாராபுரம் அண்ணா சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

பெண்களையும்இந்துமதத்தையும் இழிவுபடுத்தும் வகையில், ஆபாசமாக பேசியுள்ள அமைச்சர் பொன்முடி மற்றும் தொடர்ந்து பெண்களைஇழிவுபடுத்தும்விடியா தி.மு.க அரசை கண்டித்து திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக மகளிரணி சார்பில் தாராபுரம் அண்ணாசிலைஅருகில்நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு C.மகேந்திரன் M.A.,MLA அவர்கள் கண்டன பேருரையாற்றினார்.

இதில் கழக தலைமை செயற்குழு உறுப்பினரும், மாவட்ட மகளிரணி செயலாளருமான திருமதி P.A.ரேவதி குமார்அவர்கள் தலைமை வகித்தார்.




இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், மகளிரணி, சார்பு அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள், இன்னாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள்திரளாககலந்து கொண்டனர்.

## தற்காலிக போர் நிறுத்தத்தை மீறி ரஷியா தாக்குதல்; உக்ரைன் குற்றச்சாட்டு



கீவ், ஏப்.21

உக்ரைன் ரஷியா இடையேயான போர் 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

போரைமுடிவுக்குகொண்டுவரஅமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தநிலையில்போர்தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதனிடையே, கிறிஸ்தவ மதத்தினரின் முக்கிய நிகழ்வான ஈஸ்டர் பண்டியையொட்டி 30 மணிநேரம் தற்காலிக போர் நிறுத்தத்தை ரஷிய அதிபர் புதின் தாமாக முன்வந்து அறிவித்தார். சனிக்கிழமை மாலை 6 முதல் ஞாயிற்றுகிழமை இரவு 12 மணிவரை உக்ரைன் மீது தாக்குதல் நடத்தமாட்டோம் என்று ரஷியா அறிவித்தது.

இந்நிலையில், தற்காலிக போர் நிறுத்தத்தை மீறி ரஷியா தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார். எல்லை நகரங்களான குர்ச்க், பெல்கொரெட் போன்ற மாகாணங்களில் ரஷிய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாக ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.

## வெனிஸ் நகருக்கான பகல் நேர சுற்றுலா வரி உயர்வு



ரோம், ஏப்.21

இத்தாலியில் உள்ள வெனிஸ் நகரம் புகழ் பெற்ற சுற்றுலா தலம் ஆகும். இது யுனெஸ்கோவின் பாரம்பரிய நகரங்களுள் ஒன்றாக அறிவிக்கப்பட்டு உள்ளது. அங்கு சுற்றுலா செல்வோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

அதே சமயம் அவர்கள் விட்டுச் செல்லும் குப்பைகளால் அந்த நகரம் வெகுவாக மாசு அடைகிறது. எனவே அங்கு பகல் நேர சுற்றுலா வரியை உயர்த்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன்படி வெனிஸ் நகருக்கு பகல் நேர சுற்றுலாவிற்கு செல்ல 3 நாட்களுக்கு முன்பு முன்பதிவு செய்பவர்களுக்கு 5 யூரோ(இந்திய மதிப்பில் சுமார் ரூ.485) கட்டணமும், அதற்கு பிறகு முன்பதிவு செய்பவர்களுக்கு 10 யூரோ(சுமார் ரூ.971) கட்டணமும் வசூலிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆல்ப்ஸ் மலையில் பனிச்சரிவு சுற்றுலா பயணி உயிரிழப்பு




பாரிஸ், ஏப்.21

பிரான்சில் உள்ள ஆல்ப்ஸ் மலை பிரபல சுற்றுலா தலம் ஆகும். இயற்கை எழில் கொஞ்சும் இந்த மலையின் அழகை கண்டு ரசிக்க வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமானோர் வந்து செல்வது வழக்கம்.

இந்த நிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் அங்கு சுற்றுலா சென்றிருந்தனர். அப்போது திடீரென அங்கு பனிச்சரிவு ஏற்பட்டது. இந்த பனிச்சரிவில் சிக்கி 27 வயது வாலிபர் ஒருவர் உயிரிழந்தார்.

## ஈஸ்டர் பண்டிகை: உக்ரைன் மீது தாக்குதல் நடத்தப்படாது: ரஷிய அதிபர் புதின் அறிவிப்பு



மாஸ்கோ, ஏப்.21

உக்ரைன் ரஷியா இடையே மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது. இந்த போரை முடிவுக்கு கொண்டு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முயற்சித்து வருகின்றன. ஆனால், இதில் உறுதியான உடன்பாடு எட்ட முடியவில்லை. இதனால்,உக்ரைன் ரஷியா இடையேயான போரானது தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், ஈஸ்டர் நாளில் மட்டும் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தப்படாது என்று ரஷிய அதிபர் புதின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக புதின் கூறியிருப்பதாவது: இன்று(ஏப். 19) மாலை 6 மணிமுதல் (ரஷிய நேரப்படி) நாளை (ஏப். 20) நள்ளிரவு 12 மணிவரை தற்காலிக போர் நிறுத்தம் நிலவும்' என்று குறிப்பிட்டுள்ளார். ரஷியாவை போலவே உக்ரைன் தரப்பும் இந்த காலகட்டத்தில் சண்டையில் ஈடுபடக் கூடாது என்பதை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் ரஷிய மாளிகை தெரிவித்துள்ளது

## ராஜாஜி பவனில் அம்பேத்கர் விழா



டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் அவர்களின் 134 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை பெசன்ட் நகர் உள்ள ராஜாஜி பவனில் ராஜாஜி பவன்சென்ட்ரல் கவர்மென்ட் எம்ப்ளாயீஸ் எஸ்.சி.,எஸ்.டி வெல்ஃபேர் அசோசியேசன் சார்பில் விழா நடைபெற்றது.

இச்சங்கத்தின்தலைவர் அரசு தலைமை வகித்தார். பொதுச் செயலாளர்கள் சி.வி.சுதாகர் நாகபூஷணம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் ராஜாஜி பவன் மண்டலஇயக்குனர்சிவகுமார், ஏ.ஏ.ஓ.,மணிவாசகம்,பி.ஏ.ஓ., உமா மகேஸ்வரன், சி.பி.டப்ளுயு.டி., ஏ.இ., சுந்தர்ராஜ், யு.டி.சி பிரவீனா உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

## ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதான வக்கீலை மற்ற கைதி போல் சமமாகவே நடத்த வேண்டும்: புழல் சிறை நிர்வாகத்திற்கு ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஏப்.21

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத்தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் வழக்கறிஞர் ஹரிஹரனும் ஒருவர். புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள தனது மகனை சந்திக்க சிறை நிர்வாகம் அனுமதிக்கவில்லை எனவும், தொலைபேசி மூலம் பேச வாய்ப்பு வழங்கப்படவில்லை எனவும் கூறி ஹரிஹரனின் தாய் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார். இந்த மனு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் எஸ்.காசிராஜன், மனுதாரர் ஒவ்வொரு முறையும் தனது மகனை காண சிறைக்கு செல்லும் போதும் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது. மற்ற கைதிகளை போல அவரையும் சமமாக நடத்துமாறு உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார். சிறை நிர்வாகம் சார்பில் ஆஜரான அரசு வழக்கறிஞர் ஏ.கோபிநாத், ஹரிஹரனின் பாதுகாப்பு கருதியே அதிக பாதுகாப்பு கொண்ட சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மனுதாரர் உள்ளிட்ட உறவினர்கள் ஹரிஹரனை சந்திக்க அனுமதிக்கப்படுகிறது. வீடியோ கால் மூலமும், தொலைபேசி வாயிலாகவும் பேச அனுமதிக்கப்படுகிறது என்றார். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மற்ற கைதிகளை போல சட்டத்திற்கு உட்பட்டு அனைத்து வசதிகளையும் ஹரிஹரனுக்கு புழல் சிறை நிர்வாகம் வழங்க வேண்டும். இதை சிறைத்துறை டிஜிபி உறுதி செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

## 6 மாதங்களுக்கு முன்பு போலீசுக்கு தெரியாமல் புதைப்பு சிறுமியின் சடலம் தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை



வந்தவாசி, ஏப்.21

வந்தவாசி அருகே போலீசாருக்கு தெரியாமல் புதைக்கப்பட்ட சிறுமியின் சடலம் 6 மாதங்களுக்கு பிறகு தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அடுத்த படூர் கிராமத்தை சேர்ந்தவர் அமரேசன். இவரது மனைவி அஞ்சலை(33). இவர்களுக்கு 2 மகள்கள். மூத்த மகளுக்கு 17 வயதாகிறது. இளைய மகள் துர்கா(14).

அமரேசன் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டார். இதனால் அஞ்சலை அதே கிராமத்தை சேர்ந்த ஏழுமலை(27) என்பவரை 2வதாக திருமணம் செய்துகொண்டார். இதன் மூலம் 9 வயது மகள் உள்ளார். தம்பதி இருவரும் விறகு வெட்டும் தொழிலாளர்கள் என்பதால், செங்கல்பட்டு மாவட்டம் அத்திவாக்கம் பகுதியில் ரைஸ்மில்லில் தங்கி கூலி வேலை செய்துவந்தனர். 3 மகள்களும் மூடூர் கிராமத்தில் சித்தேரி பகுதியில் வசிக்கும் அஞ்சலையின் தந்தை ஜெயராமன், மனைவி நாகம்மா ஆகியோரின் பராமரிப்பில் உள்ளனர்.

3 பேரும் அருகே உள்ள அமுடூர் உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்தனர். இந்நிலையில் 8ம் வகுப்பு படிக்கும் துர்கா கடந்த அக்டோபர் 14ம் தேதி பள்ளிக்கு சென்று வீடு திரும்பிபோது, தனது அக்காவிடம், ‘விவசாயத்திற்கு பயன்படுத்தும் மருந்து சாப்பிட்டு விட்டேன்’ என கூறினாராம். பின்னர் வீட்டில் மயங்கி விழுந்து பலியானதாக தெரிகிறது. இதுகுறித்து போலீசாருக்கு தெரிவிக்காமல் உறவினர்கள் அங்குள்ள ஏரிக்கரையில் சடலத்தை புதைத்துள்ளனர்.

இதுகுறித்து தெள்ளாரில் உள்ள தொண்டு நிறுவனத்தை சேர்ந்த ஒருவர், திருவண்ணாமலை எஸ்பி, பழங்குடியினர் ஆணையம் உள்ளிட்ட அலுவலகங்களுக்கு மனு அளித்தார். அதில் மாணவியை கேலி கிண்டல் செய்து பாலியல் தொந்தரவு கொடுத்ததால் விஷம் குடித்து இறந்தார் என தெரிவித்திருந்தார். இதுகுறித்து எஸ்பி சுதாகர் உத்தரவின்பேரில் தெள்ளார் போலீசார் நேற்றுமுன்தினம் வழக்குப்பதிவு செய்தனர்.

தொடர்ந்து நேற்று தாசில்தார் பொன்னுசாமி, டிஎஸ்பி தீபக் ரஜினி, தெள்ளார் இன்ஸ்பெக்டர் ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் உடல் தோண்டி எடுக்கும் பணி நடந்தது. திருவண்ணாமலை அரசு மருத்துவமனை டாக்டர்கள் 3 பேர் கொண்ட குழுவினர் சம்பவ இடத்திலேயே பிரேத பரிசோதனை செய்தனர்.

பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பின், உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என டிஎஸ்பி தெரிவித்தார். 6 மாதங்களுக்கு முன்பு இறந்த சிறுமியின் சடலம்தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.



## திருப்பூர்: மின்கம்பத்தில் மோதி தலைகீழாக கவிழ்ந்த கார்

திருப்பூர், ஏப்.21

திருப்பூர் மாவட்டம் காங்கயம் அடுத்த கொடுவாய், நிழலி கிராமம் எல்லப்பாளையம்புதூர் பகுதியைசேர்ந்தவர்கார்த்திக் (வயது 36). இவரது அக்காள் மகன் 15 வயது சிறுவனுடன் நேற்று மதியம் 1 மணி அளவில் கொடுவாய் நிழலி கிராமத்திலிருந்து அவர்களது காரில் சொந்த வேலையாக காங்கயம் திற்கு வந்துள்ளனர்.

காரை கார்த்தி ஓட்டி வந்தார். அவர் அருகே சிறுவன் அமர்ந்திருந்தான். கோவைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் காங்கயம் அடுத்த அகஸ்தியலிங்கம்பாளையம் அருகே வந்து கொண்டிருந்த போது திடீரென கட்டுப்பாட்டை இழந்த கார் எதிர்பாராத விதமாக சாலையின் இடப்புறம் இருந்த மின் கம்பத்தின் மீது மோதி தலைகீழாக கவிழ்ந்து உருண்டது.

இந்த விபத்தில் மின் கம்பம் உடைந்து கிழே விழுந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டது. உடனே அருகில் இருந்தவர்கள் விபத்துக்குள்ளான இருவரையும் மீட்டனர். அதிர்ஷ்டவசமாக எந்தவொரு அசம்பாவிதமும் இன்றி இருவரும் உயிர் தப்பினர். இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## லிப்ட் கொடுத்த நபருக்கு நேர்ந்த சோகம்.. ரூ.30 ஆயிரம், இருசக்கர வாகனம் பறிப்பு

திருவாரூர், ஏப்.21

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே காலாஞ்சிமேடு பகுதியில் சந்தோஷ் என்பவர் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக நின்றுகொண்டிருந்தநபர் ஒருவர் சந்தோசிடம் லிப்ட் கேட்டுள்ளார். சந்தோசும் அந்த நபருக்கு லிப்ட் கொடுத்துள்ளார்.

அவரை அழைத்துக் கொண்டு சென்ற சிறிது தூரத்தில் அங்கிருந்த நான்கு பேர், சந்தோஷை யாரும் இல்லாத இடத்திற்கு அழைத்து சென்று நிர்வாணப்படுத்தியுள்ளனர். மேலும், அவரிடம் இருந்த30ஆயிரம்ரூபாய் ரொக்க பணம் செல்போன் மற்றும் இருசக்கர வாகனத்தை பறித்துச் சென்றுள்ளனர். இதுகுறித்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருநெல்வேலி டெல்லி சிறப்பு ரெயில் அறிவிப்பு

திருநெல்வேலி, ஏப்.21

திருநெல்வேலியில் இருந்து டெல்லி ஹஸ்ரத் நிஜாமுதீனுக்கு சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06161) அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரெயில் 21 ஏப்ரல் 2025 அன்று (நாளை) இரவு 10.15 மணியளவில்புறப்படும்.

ரெயில் அமைப்பு: 20 ஸ்லீப்பர் வகுப்பு பெட்டிகள் மற்றும் 2 இரண்டாம் வகுப்பு பெட்டிகள் உள்ளன.

மதுரைபகத் கி கோதி

மதுரையில் இருந்து பகத் கி கோதி செல்லும் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06067) ஏப்ரல் 21, 2025 அன்று (நாளை) காலை 10.45 மணிக்கு மதுரையில் இருந்து புறப்படும்.

மறுமார்க்கத்தில் ராஜஸ்தான்பகத்கிகோதியில் இருந்து மதுரை செல்லும் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06067) ஏப்ரல் 21, 2025 அன்று (நாளை) காலை 5.30 மணிக்கு பகத் கி கோதியில் இருந்து புறப்படும்.

ரெயில் அமைப்பு: 12 ஏசி மூன்று அடுக்கு பெட்டிகள், 6 ஏசி மூன்று அடுக்கு எகானமி பெட்டிகள்மற்றும் 2 லக்கேஜ்கம் பிரேக் வேன் உள்ளன.

## ஈரோடு: பங்குச்சந்தையில் பணத்தை இழந்த ஐ.டி. ஊழியர் தற்கொலை

ஈரோடு, ஏப்.21

ஈரோடு கைக்காட்டி வலசு பாரதியார் நகரை சேர்ந்தவர் செந்தமிழ் செல்வன் (வயது 34). ஐ.டி நிறுவன ஊழியர். இவருடைய மனைவி லலிதா. இவர்களுக்கு குழந்தை இல்லை. செந்தமிழ் செல்வன் வீட்டில் இருந்தபடி தனியார் நிறுவனம் கொடுக்கும் வேலையை செய்து வந்துள்ளார்.

மேலும் இவர் தனக்கு தெரிந்த பலரிடம் கடன் வாங்கி பங்குச்சந்தையில் முதலீடு செய்துள்ளார். இதில் பலலட்சரூபாயை செந்தமிழ் செல்வன் இழந்ததாக கூறப்படுகிறது. இதனால் கடன் கொடுத்தவர்களுக்கு பணத்தை திருப்பி கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக செந்தமிழ் செல்வன் கடும் மனஉளைச்சலுக்கு ஆளானார். இதனால் அவருக்கு மனைவி லலிதா ஆறுதல் கூறி வந்தார்.

எனினும் பணத்தை திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில் மிகுந்த மனவேதனையில் இருந்த செந்தமிழ் செல்வன் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து நேற்று முன்தினம் தூக்குப்போட்டு கொண்டார். இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த லலிதா, அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கணவரை மீட்டு சிகிச்சைக்காக ஈரோடு அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் ஏற்கனவே செந்தமிழ் செல்வன் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து ஈரோடு வீரப்பன்சத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அவர் பங்குச்சந்தையில் இழந்த தொகை எவ்வளவு எனவும் விசாரணை நடந்து வருகிறது.

## திருவாரூர்: மூதாட்டியிடம் 5 பவுன் தங்க செயினை பறித்த பெண் கைது

திருவாரூர். ஏப்.21

மன்னார்குடி மாடர்ன் நகரில் வசித்து வருபவர் அம்சா (வயது 79). இவரது மகன் திருச்சியில் வசித்து வருகிறார். கணவர் இறந்து விட்ட நிலையில் தனியாக வசித்து வரும் மூதாட்டிக்கு மருந்து மாத்திரைகள் தனியார் மருந்து கடை மூலம் வாரந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. வழக்கம்போல மருந்து கடை ஊழியரான நந்தினி (24) என்பவர் மருந்துகளை வழங்க நேற்று மூதாட்டி அம்சா வீட்டிற்கு சென்றுள்ளார்.

அப்போது அவர் மூதாட்டி கழுத்தில் இருந்த 5 பவுன் சங்கிலியை பறித்துக்கொண்டு நந்தினி அங்கிருந்து தப்பியுள்ளார். அப்போது தடுமாறி கீழே விழுந்ததில் மூதாட்டிக்கு காயம் ஏற்பட்டது.

பின்னர் மூதாட்டியின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மூதாட்டியை மீட்டு மன்னார்குடி அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக சேர்த்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த மன்னார்குடி போலீசார் சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து தனியார் மருந்து கடை ஊழியர் நந்தினியை கைது செய்தனர்.

விசாரணையில்மூதாட்டியிடம் இருந்து பறித்து சென்ற தங்க சங்கிலியை நந்தினி அடகு கடையில் அடகு வைத்தது தெரிய வந்தது. இதைடுத்து போலீசார் தங்க சங்கிலியை பறிமுதல் செய்தனர்.

## கரூர்: விஷபூச்சி கடித்து முதியவர் சாவு

கரூர், ஏப்.21

கரூர் அருகே உள்ள கூனம்பட்டியை சேர்ந்தவர் கருப்பண்ணன் (வயது 62). மரம் ஏறும் தொழிலாளி. இவர் கடந்த 16ந்தேதி தொட்டம்பட்டியில் உள்ள ஒரு தோட்டத்தில் தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களை வெட்டியுள்ளார்.

அப்போது அதில் இருந்த விஷபூச்சி ஒன்று கருப்பண்ணனை கடித்துள்ளது.

இதனால் வலி தாங்க முடியாமல் தவித்த அவர் தென்னிலையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பின்னர் மேல் சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் கருப்பண்ணன் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து தென்னிலை போலீசார் வழக்குப்பதிவு விசாரணை நடத்தி வருகின்றனர்.

## குடிசையில் தீ விபத்து ... ரூ.4 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து சேதம்



நாமக்கல், ஏப்.21

நாமக்கல் அருகே பொத்தனூரரை சேர்ந்தவர் பாலகிருஷ்ணன் (50). இவர் தனது குடும்பத்துடன் கீற்று மற்றும் தகரத்தால் வேயப்பட்ட குடிசை வீட்டில் வசித்து வருகிறார். இந்நிலையில் நேற்று இரவு பாலகிருஷ்ணன் குடும்பத்ினருடன் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது குடிசை வீட்டில் திடீரென தீப்பற்றி எரிய தொடங்கியது. அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த பாலகிருஷ்ணன் அக்கம்பக்கத்தில் இருந்தவர்களை அழைத்து தீயை அணைக்க முயற்சி செய்தார். இருப்பினும் தீயை அணைக்க முடியவில்லை. தீ மளமளவென பரவி வீடு முழுவதும் கொழுந்துவிட்டு எரிந்தது. இதுகுறித்து உடனடியாக பாலகிருஷ்ணன் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.

தகவல் அறிந்து அங்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் குடிசை வீட்டில் பற்றி எரிந்து கொண்டிருந்த தீயை தண்ணீரை பீய்ச்சி அடித்து அணைக்க முயன்றனர். ஆனால் நீண்ட நேரம் போராடி தீ மேலும் பரவாமல் தடுத்தனர். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

இந்த தீ விபத்தில் குடிசையில் இருந்த பீரோ, கட்டில், டி.வி., மின்விசிறி, துணிமணிகள், உணவு பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான ஆவணங்கள் அனைத்தும் எரிந்து சாம்பல் ஆனது. இதன் மதிப்பு சுமார் ரூ.4 லட்சம் இருக்கும் என கூறப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து வேலூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நாங்குநேரி மாணவர் சின்னதுரையை தாக்கிய 2 பேர் கைது

நெல்லை, ஏப்.21

நெல்லை மாவட்டம் நாங்குநேரி பகுதியைச்சேர்ந்த கல்லூரி மாணவர் சின்னத்துரை. இவர் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பிளஸ் 2 படித்துக் கொண்டிருந்த போது சக மாணவர்களால் அரிவாளால் வெட்டப்பட்டுதாக்குதலுக்குஆளானசம்பவம்தமிழகத்தையே உலுக்கியது.

தற்போது கல்லூரியில் படித்து வரும் அவர், மீண்டும் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளார். இன்ஸ்டாகிராம் செயலி மூலம் அறிமுகமான நபர் ஒருவர், தங்களுக்கு திருமண அழைப்பிதழ் தரவேண்டும் என கூறி சின்னத்துரையை தனி இடத்துக்கு அழைத்ததாக கூறப்படுகிறது.

அதனை நம்பிச் சென்ற சின்னதுரையை, 4 பேர் கொண்ட கும்பல் பணம் கேட்டுத் தாக்கியதாகவும் பணம் இல்லாத நிலையில், செல்போனை பறித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது. தாக்குதலில் காயமடைந்த சின்னத்துரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டநிலையில்சிகிச்சைமுடிந்துவீடுதிரும்பினார்.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், சின்னதுரை தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சங்கரநாராயணன் மற்றும் சக்திவேல் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இன்ஸ்டாகிராம் மூலம் நட்பாக பழகி, பணம் பறிக்கும் நோக்கில் சின்னதுரையை வரவழைத்து தாக்கியதாக விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது. இந்த தாக்குதல் வழக்கில் தலைமறைவாக உள்ள மேலும் 3 பேரை போலீசார் 2 தனிப்படைகள் அமைத்து தீவிரமாக தேடி வருகின்றனர்.

## சென்னையின் முதல் ஏசி மின்சார ரெயில் புறப்படும் நேரம் என்ன? கட்டணம் எவ்வளவு?

சென்னை, ஏப்.21

சென்னையில் உள்ள மக்களின் முக்கிய போக்குவரத்தாக மின்சார ரெயில் சேவை இருந்து வருகிறது. இந்த மின்சார ரெயிலின் மூலம் வேலைக்கு செல்வோர், பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். இந்த நிலையில், சென்னையில் முதல் முறையாக ஏசி மின்சார ரெயில் சேவையை தெற்கு ரெயில்வே அறிமுகம் செய்துள்ளது. இது பயணிகளின் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

சென்னை கடற்கரையில் இருந்து செங்கல்பட்டு வரை இந்த புறநகர் மின்சார ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயிலில் 1,116 பேர் நின்றும்,3,798 பேர் அமர்ந்தும் பயணிக்கலாம். இந்த ஏசி ரயிலானது அதிகபட்சமாக 110 கி.மீ. வேகத்தில் செல்லும். இந்த ரெயில் புறப்படும் நேரம் மற்றும் கட்டணம் போன்ற விபரங்கள் பின் வருமாறு;

★ முதலில் இந்த ஏசி மின்சார ரயில் தாம்பரம் பணிமனையில் இருந்து அதிகாலை 5.45 மணிக்கு புறப்படும்.

காலை 6.45 மணிக்கு சென்னை கடற்கரையை வந்தடையும். இதன்பிறகு சென்னை கடற்கரையில் இருந்து காலை 7.00 மணிக்கு புறப்பட்டு தாம்பரத்துக்கு 7.48 மணிக்கும், செங்கல்பட்டுக்கு காலை 8.45 மணிக்கும் சென்றடையும்.

★ இதேபோன்று சென்னை கடற்கரையில் இருந்து பிற்பகல் 3.45, இரவு 7.35 மணிக்கு புறப்படும் ஏசி மின்சார ரயில், தாம்பரத்துக்கு மாலை 4.20, இரவு 8.30 மணிக்கும், செங்கல்பட்டுக்கு மாலை 5.25 மணிக்கு சென்றடையும். சென்னை கடற்கரையில் இருந்து இரவு 7.35 மணிக்கு புறப்படும் மின்சார ரயில் தாம்பரம் வரை மட்டும் செல்லும்.

★ மறுமார்க்கத்தில், செங்கல்பட்டில் இருந்து காலை9.00மணி,மாலை 5.45 மணிக்கு புறப்படும் ஏசி மின்சார ரயில்கள், தாம்பரத்துக்கு காலை 9.38 மணி, மாலை 6.23 மணிக்கும், சென்னை கடற்கரைக்கு காலை 10.30 மணி, இரவு 7.15 மணிக்கும் செல்லும்.டற்கரை தாம்பரம் இடையே அனைத்து ரயில் நிலையங்களிலும் நின்று செல்லும்.

★ தாம்பரத்தில் இருந்து அதிகாலையில் கடற்கரைக்கு புறப்படும் போதும்,

இரவில் கடற்கரையில் இருந்து தாம்பரத்திற்கு வரும் போதும் இந்த ரயில்கள் புறநகர் பாதையில் இயக்கப்படும். மற்ற நேரங்களில் செல்லும் போது, கோட்டை, பூங்கா, எழும்பூர், மாம்பலம், கிண்டி, பரங்கிமலை, தாம்பரம், பெருங்களத்தூர், கூடுவாஞ்சேரி, பொத்தேரி, சிங்கப்பெருமாள் கோவில், பரனூர் ஆகிய 12 ரயில் நிலையங்களில் நின்று செல்லும்.

★ ஞாயிற்றுக்கிழமை இந்த ரயில்கள் இயக்கப்படாது. திங்கள் முதல் சனிக்கிழமை வரை மட்டும் தான் இந்த சேவைகள் இயக்கப்படும்.

கட்டண விபரம்;

இந்தக ரயிலில் அதிகபட்சமாக ரூ 105 கட்டணமும் குறைந்தபட்சமாக ரூ 35 கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. சென்னை கடற்கரை டூ செங்கல்பட்டுக்கு ரூ 105 கட்டணமாகவும், தாம்பரம் டூ செங்கல்பட்டிற்கு ரூ 85 கட்டணமாகவும், தாம்பரம் எழும்பூருக்கு ரூ 60 கட்டணமாகவும் செங்கல்பட்டு டூ எழும்பூருக்கு ரூ 85 கட்டணமாகவும் வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசைத்தறி நெசவாளர்கள் போராட்டம்: பா.ஜ.க. ஆதரவு



சென்னை, ஏப்.21

பா.ஜ.க.மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ்வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

கோயம்புத்தூர் அருகே சோமனூரில் கூலி உயர்வு மற்றும் உழைப்புக்கேற்ற ஊதிய கோரிக்கைகளைத் தமிழக அரசிடம் வலியுறுத்தி கடந்த சில தினங்களாக போராடி வரும் விசைத்தறி நெசவாளப் பெருமக்களை நேரில் சென்று சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தேன்.

தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பார்த்து தங்களது உடலை வருத்திக் கொள்ள வேண்டாமென கேட்டுக் கொண்டதோடு, கூட்டத்தில் உரையாடுகையில், சட்டமன்றத்தில் இதைப் பற்றி பேசி தமிழக முதல்அமைச்சரிடம் வலியுறுத்துவேன் எனவும், கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் காந்தி அவர்களையும் சந்தித்து விசைத்தறியாளர்களின் கோரிக்கைகளை உடனடியாக பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்வேன் எனவும் உறுதியளித்தேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொலை வழக்கில் தலைமறைவாக இருந்த குற்றவாளி, 31 ஆண்டுகளுக்கு பின் கைது

ராணிப்பேட்டை, ஏப்.21

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் உட்கோட்டம் அரக்கோணம்நகரகாவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 1994ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கொலை வழக்கில் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் இரண்டாவது குற்றவாளி கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருந்து வந்த நிலையில், அவரைகைது செய்ய வேண்டி இராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் அடிப்படையில், அரக்கோணம் உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளரால் தனிப்படை அமைக்கப்பட்டது.

அவர்களின் விசாரணையில், அசாம் மாநிலம் திப்ருகார் என்ற இடத்தில் குற்றவாளி தலைமறைவாக இருப்பதாக தெரியவர, அதனடிப்படையில் தனிப்படை போலீசார் துரித நடவடிக்கை மேற்கொண்டு திப்ருகார் சென்று குற்றவாளியை அடையாளம் கண்டு, போலீசார் கைதுசெய்தனர். 31 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்தவரை நேற்று கைது செய்துள்ளபோலீசார்,அவரை தமிழ்நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

## கள்ளக்காதலி பிரிந்து சென்றதால்... வாலிபர் தூக்குப்போட்டு தற்கொலை

ஈரோடு, ஏப்.21

ஈரோடு எலவமலை பகுதியை சேர்ந்தவர் சேகர் (30). இவருடைய மனைவி பிரசவத்திற்காக ஜெயம்கொண்டத்தில் உள்ள தனது தாய் வீட்டிற்கு சென்று விட்டார். இதற்கிடையில் சேகருக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து சேகர், தனது கள்ளக்காதலியுடன் பெரியசேமூர் பகுதியில் குடும்பம் நடத்தி வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கள்ளக்காதலி பிரிந்து சென்றதால் மனமுடைந்த சேகர் நேற்று முன்தினம் வீட்டில் தூக்குப்போட்டு கொண்டார். இதைப்பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக ஈரோடு அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் ஏற்கனவே சேகர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து ஈரோடு வீரப்பன்சத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## குமரி: கண்ணாடி பாலத்தில் சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல அனுமதி



கன்னியாகுமரி, ஏப்.21

கன்னியாகுமரி கடலின் நடுவே ஒரு பாறையில் திருவள்ளுவர் சிலையும் மற்றொரு பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அமைந்துள்ளன. விவேகானந்தர் பாறையில் இருந்து திருவள்ளுவர் சிலைக்கு செல்ல கடலின் நடுவே கண்ணாடி நடை பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கண்ணாடி நடை பாலத்தில் பராமரிப்பு பணிகளை நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் கடந்த 15ந்தேதி தொடங்கினர். இதனால் பாலத்தில் சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இந்த பராமரிப்பு பணிகள் கடந்த 4 நாட்களாக நடந்து வந்தது. அந்த நாட்களில் சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல தடை விதிக்கப்பட்டது. இதற்கிடையே கண்ணாடி நடைபால பராமரிப்புபணிகளைமாவட்ட கலெக்டர் அழகுமீனா நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த நிலையில் தற்போது பராமரிப்பு பணிகள் முடிவடைந்தது. அதன்படி 4 நாட்களுக்கு பிறகு நேற்று முதல் கண்ணாடி நடைபாலத்தில் சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர். அதனைதொடர்ந்து கன்னியாகுமரிக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகள் படகு துறையில் நீண்ட வரிசையில் காத்திருந்து படகில் ஆர்வத்துடன் பயணம் செய்தனர். பின்னர் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்ட அவர்கள் கண்ணாடி நடைபாலத்தின் வழியாக நடந்து சென்று திருவள்ளுவர் சிலையை கண்டுகளித்தனர்.

# பந்தலூர் நடைபாதையில் கான்கிரீட் தளம் அமைக்க நடவடிக்கை

நீலகிரி, ஏப்.21

நீலகிரி மாவட்டம் பந்தலூர் தாலுகா சேரம்பாடி அருகே கோரஞ்சால் பகுதி உள்ளது. இந்த பகுதியில் இருந்து லெனின்நகருக்கு நடைபாதை செல்கிறது. இங்குள்ள மக்களுக்கு அந்த நடைபாதைதான் முக்கிய வழியாக இருந்து வருகிறது. பள்ளிகல்லூரி மாணவர்கள், வேலைக்கு செல்பவர்கள் நடைபாதை வழியாக நடந்து சேரம்பாடிக்கு வந்து அங்கிருந்து பல்வேறு இடங்களுக்கு செல்கின்றனர். ஆனால் மழைக்காலங்களில் நடைபாதையில் மக்கள், மாணவர்கள் நடந்து செல்ல முடியாதபடி மழைவெள்ளம் தேங்கிவிடுகிறது. இதனால் அவர்கள் கடும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

எனவே நடைபாதையில் கான்கிரீட் தளம் அமைக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர்.



இதுதொடர்பாக 'தினத் தந்தி' நாளிதழில் நேற்று படத்துடன்செய்திவெளியானது. இதன் எதிரொலியாக நடைபாதையில் கான்கிரீட்தளம்அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா கூடலூர் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்நிலையில், ஆணையாளர் அந்த பகுதிக்கு சென்று நடைபாதையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து விரைவில் நடைபாதையில் கான்கிரீட்தளம் அமைக்கநடவடிக்கை எடுப்பதாக பொதுமக்களிடம் தெரிவித்தார். இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# போதையில் கார் ஓட்டிய பிரபல நடிகரின் டிரைவர் கைது 3 பேர் படுகாயம்|

சென்னை, ஏப்.21

தமிழ் சினிமாவில் பிரபல நடிகராக இருப்பவர் பாபி சிம்ஹா. பீட்சா, சூது கவ்வும், ஜிகர்தண்டா, இந்தியன்2 உள்ளிட்டபடங்களில்நடித்து ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தார். இவரிடம் டிரைவராக பணியாற்றி வந்தவர் புஷ்பராஜ். இவர் பாபி சிம்ஹாவின் தந்தையை வீட்டில் விட்டுவிட்டு கிண்டி கத்திபாரா அருகே வந்துகொண்டிருந்தார். அப்போது திடீரென கார்விபத்துக்குள்ளானது. இதில், 3 பேர் படுகாயமடைந்தனர். மேலும் 6க்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்தன. இதனையடுத்து, உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.



விரைந்து வந்த போலீசார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து, புஷ்பராஜிடன் மேற்கொண்ட விசாரணையில் அவர் மது போதையில் வாகனம் இயக்கியது தெரியவந்தது. இதனையடுத்து, போலீசார்டிரைவர்புஷ்பராஜை கைது செய்து காரை பறிமுதல் செய்தனர்.

# பழனி கலைக்கல்லூரியில் மாணவர்களை தாக்கிய பேராசிரியர் சஸ்பெண்ட்

திண்டுக்கல், ஏப்.21

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் பழனியாண்டவர் கலைக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரி பழனி கோவிலுக்கு உட்பட்டதாகும். இதனிடையே, இந்த கல்லூரியில் சுயநிதி பிரிவு வணிகவியல் துறையில் கவுதமன் என்பவர் பேராசிரியராக பணியாற்றி வந்தார். அவர் வகுப்பறைக்குள் மாணவர்களை நாற்காலியை கொண்டு தாக்குவதும், ஆபாச வார்த்தைகளில் பேசிய வீடியோ சமூகவலைதளத்தில் வைரலானது.



இதுதொடர்பாக பேராசிரியர் கவுதமன் மீது நடவடிக்கை எடுக்ககோரி மாணவர்கள்புகார் அளித்தனர். இந்த புகார் குறித்து விசாரணை நடத்திய கல்லூரி நிர்வாகம், பேராசிரியர் கவுதமனை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டது.

# திருப்பூரில் பனியன் துணிகள் கொள்முதல் செய்து ரூ.1.45 கோடி மோசடி... ஐதராபாத் தம்பதி கைது

திருப்பூர், ஏப்.21

திருப்பூர் காந்தி நகர் பகுதியை சேர்ந்தவர் மகேஷ் ராமசாமி. இவர் அதே பகுதியில் பனியன் துணிகள் ஏற்றுமதி நிறுவனம் நடத்தி வருகிறார். இவரிடம் இருந்து தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தை சேர்ந்த பிரவீன் குமார், கல்பனா தம்பதியினர் ரூ.1 கோடியே 45 லட்சத்திற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு பனியன் துணிகள் கொள்முதல் செய்துள்ளனர். ஆனால் அந்த பணத்தை தராமல் ஏமாற்றி வந்தனர். இதனால் ஏமாற்றம் அடைந்த மகேஷ் ராமசாமி ஐதராபாத் தம்பதி மீது திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் திருப்பூர் மாநகர மத்திய குற்றப்பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. போலீசார் தேடுவதை அறிந்த தம்பதியினர் தலைமறைவானார்கள். இந்த நிலையில் தலைமறைவாக இருந்த தம்பதியை மத்திய குற்றப்பிரிவு தனிப்படையினர் தெலுங்கானா சென்று தேடிவந்தனர். அப்போது ஐதராபாத்தில் தங்கியிருந்த தம்பதியை கைது செய்து திருப்பூர் அழைத்து வந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# டாஸ்மாக் கடையை உடைத்து மதுபாட்டில்கள் கொள்ளை

தென்காசி, ஏப்.21

தென்காசி மாவட்டம் புளியங்குடி நவாச்சாலையில் ஊருக்கு வெளியே வயல்வெளி பகுதியில் டாஸ்மாக் கடை செயல்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் வழக்கம்போல் வியாபாரம் முடிந்து ஊழியர்கள் கடையை பூட்டி விட்டு சென்றனர். நள்ளிரவில் அங்கு வந்த மர்மநபர்கள், இரும்பு கம்பியால் பூட்டை உடைத்து உள்ளே புகுந்தனர்.

பின்னர் அவர்கள், கடையில் இருந்த விலை உயர்ந்த ரக மதுபாட்டில்களை கொள்ளையடித்து சென்றனர். பணத்தை



கடை ஊழியர்கள், பாதுகாப்பு கருதி தங்கள் பொறுப்பில் எடுத்துச் சென்றதால் அந்த பணம் தப்பியது. மேலும், கொள்ளை யர்கள் தங்களை அடையாளம் காண முடியாத அளவில் கடையில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களை சேதப்படுத்திவிட்டு தப்பி ஓடி விட்டனர்.

போலீசார்ரோந்து பணியில் ஈடுபட்டபோது டாஸ்மாக் கடையில் கதவு திறந்து கிடந்ததை பார்த்து ஊழியர்களுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் வந்து கடைக்குள் சென்று பார்த்தனர்.

அப்போது மதுபாட்டில்கள் கொள்ளையடிக்கப்பட்டது தெரியவந்தது. தகவல் அறிந்த புளியங்குடி போலீசார் வந்து பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டனர். இந்த துணிகர கொள்ளை குறித்து புளியங்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்து மதுபாட்டில்களை கொள்ளையடித்து சென்ற மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகிறார்கள்.

# கொடைக்கானலில் போக்குவரத்து நெரிசலை சரி செய்ய சிசிடிவி மூலம் கண்காணிக்க ஏற்பாடு

திண்டுக்கல், ஏப்.21

கொடைக்கானலில் கோடை சீசன் துவங்கியுள்ளதை முன்னிட்டும், ஏரி பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பை மேம்படுத்தவும், ஏரி சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டால் அதை உடனடியாக சரிசெய்யவும், பிளாஸ்டிக் குப்பைகள், மதுபாட்டில்களை ஏரியில் வீசி செல்வோரை கண்டுபிடிக்கும் விதமாகவும் நகராட்சி சார்பில் ஏரி பகுதியை சுற்றி 60 இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

இதுகுறித்து நகராட்சி ஆணையாளர் சத்தியநாதன் கூறியதாவது;

கொடைக்கானல் நட்சத்திரஏரியில் நகராட்சி சார்பில் இரண்டு படகு இல்லங்கள் உள்ளன. ஏரியைசுற்றிகிலோ மீட்டர்சுற்றளவிற்கு நடைபாதைகள்உள்ளன. இவற்றை கண்காணிப்பதற்கு 60 இடங்களில் ரூ.50 லட்சம் செலவில் நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளன. இந்த பணிகள் இன்னும் ஒரு



சில நாட்களில் நிறைவடையும்.

ஏரியில் சட்டவிரோத மாக தண்ணீர் எடுப்பவர்கள், ஏரிக்கு உள்ளே தேவையற்ற குப்பைகளை வீசி எறிபவர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும், சுற்றுலா பயணிகள் பாதுகாப்பிற்காகவும், குற்றச்சம்பவங்களை தடுக்கவும் இந்த கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கேமராக்கள்மூலம் எடுக்கப்படும் பதிவுகள் நகராட்சி அலுவலகத்தில் பார்வையிடும் வகையில் ஒளித்திரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த கேமராக்களின் பதிவுகளை காவல் துறையினரும் பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு கூறினார்.

# கழிவுநீர் கால்வாயில் தேங்கிய குப்பைகள் அகற்றம்

திருப்பூர், ஏப்.21

திருப்பூர் ராயபுரம் பகுதியில்ஸ்டேட் பேங்க் காலனி பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாயில் குப்பைகள் அதிக அளவில் தேங்கி கழிவுநீர் செல்ல வழியில்லாமல் துர்நாற்றம் வீசியது. இதனால் அந்த பகுதியில் கொசு தொல்லை அதிகரித்து, நோய் தொற்று ஏற்படும் நிலை ஏற்பட்டது. இதனை தொடர்ந்து குப்பைகளை அகற்ற வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது குறித்து 'தினத்தந்தி' நாளிதழில் படத்துடன் செய்தி வெளியிடப்பட்டது. அதன்படி குப்பைகள் அகற்றப்பட்டது.



# நெல்லை: நடந்து சென்ற பெண்ணிடம் நகை பறிப்பு 2 பேர் கைது

திருநெல்வேலி, ஏப்.21

திருநெல்வேலி மாநகர்.குலவணிகர்புரத்தைச் சேர்ந்த ஞானசிகாமணி மனைவி மூக்கம்மாள் (வயது 45), நேற்று இரவு பெருமாள்புரம் பகுதியில்உள்ளரயில்வே பீடர் ரோட்டில் உள்ள திருமண மண்டபம் அருகே உள்ள சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த மர்மநபர்கள் 2 பேர் மூக்கம்மாள் அணிந்திருந்த நகையை பறித்துள்ளனர். இதனால் அவர் கூச்சலிட்டுள்ளார். அப்போது அங்கு நடந்து வந்த மூதாட்டி ஒருவர் அந்த மர்ம நபர்களை தடுக்கமுயற்சித்துள்ளார். அப்போது அந்த நபர்கள் கையில் இருந்த நகையும், செல்போனும் கீழே விழுந்துள்ளது.

இதனையடுத்து பெருமாள்புரம் போலீசாருக்கு இதுகுறித்து தகவல் கொடுக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று, அங்கிருந்த சி.சி.டி.வி. உதவியோடு மர்ம நபர்களை தேடும் பணியில் ஈடுபட்டனர். அப்போது திருநெல்வேலி மாவட்டம், மேல தாழையூத்தைச் சேர்ந்த முகமதுஹனிபா மகன் முகமதுராபிக் (32), தூத்துக்குடி மாவட்டம், நாசரேத்தைச் சேர்ந்த வில்லியம் மகன் பிரபு (29) ஆகிய 2 பேரும் நகை பறிப்பில் ஈடுபட்டது தெரியவந்தது. இதனையடுத்து பெருமாள்புரம் போலீசார் அவர்கள் 2 பேரையும் சம்பவம் நடந்த 4 மணி நேரத்திற்குள் அன்று இரவே கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

# நிலவுக்கு அருகே வரும் இரு கோள்கள்.. வானில் நிகழும் அதிசயம்

சென்னை, ஏப்.21

நமது சூரிய குடும்பத்தின் முக்கிய 8 கோள்களும் சூரியனை வெவ்வேறு வேகத்தில் சுற்றி வருகின்றன. கோள்கள் வெவ்வேறு வேகத்தில்சுற்றிவருவதால், சில நேரங்களில் அவற்றில் பல, சூரியனின் ஒரே பக்கத்தில் வரிசை கட்டி நிற்பது உண்டு. அந்த சமயத்தில்பல கோள்களைஒரே நேரத்தில் நம்மால் காண முடியும்.

ஆனால் இந்த முறை நிலவுக்கு அருகே இரண்டு கோள்கள் வந்து நமது கண்களுக்கு விருந்து படைக்க உள்ளன. அதாவது, வெள்ளி மற்றும் சனி கோள்கள் வருகிற 25ம் தேதி அருகருகே சந்திக்க உள்ளதாக



கணிக்கப்பட்டு உள்ளது. அன்றைய தினம் வெள்ளி மற்றும் சனி கோள்களுக்குகீழே தேய்பிறை நிலாவும் வர உள்ளதால் பார்ப்பதற்கு ஸ்மைலி எமோஜி (நிலவு சிரிப்பதை போல) போல காட்சியளிக்க உள்ளது. இவையனைத்தும் பளிச்சென காட்சியளிக்கும் என்பதால் சாதாரண கண்களாலேயே பார்க்க முடியுமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# கோவையில் அதிர்ச்சி சம்பவம்: 9ம் வகுப்பு மாணவிக்கு பெண் குழந்தை பிறந்தது

கோயம்புத்தூர் ஏப்.21

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அருகே உள்ள கிராமத்தைச்சேர்ந்தஇளம்பெண் ஒருவர்பிரசவ வலியுடன் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் அவருக்கு பெண் குழந்தை பிறந்தது.

அந்தபெண் சிறுமி போல இருந்ததால் அவரது வயதை டாக்டர்கள் விசாரித்தனர். அப்போது அவருக்கு 16 வயது மட்டுமே ஆவது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த டாக்டர்கள், சிறுமிக்கு குழந்தை பிறந்தது குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.இதனைத்தொடர்ந்து போலீசார் தேரில் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் அந்த மாணவி அங்குள்ள பள்ளியில் 9ம் வகுப்பு படித்துள்ளார். அவரும், அதே பகுதியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (வயது 22) என்பவரும் காதலித்துள்ளனர்.

இதனையடுத்துகோபாலகிருஷ்ணன் மாணவியை திருமணம் செய்து முடிவு செய்துள்ளார். இதையடுத்து 2 பேரின் பெற்றோர் சம்மதத்துடன் அங்குள்ள கோவிலில் அவர்கள் மாலை மாற்றி திருமணம் செய்துள்ளனர். கோபாலகிருஷ்ணன் வீட்டில் மாணவி வசித்து வந்துள்ளார். அதன்பிறகும் அவர் பள்ளிக்கு சென்று வந்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையே மாணவி கர்ப்பம் ஆனதால் பள்ளிக்கு செல்லாமல் வீட்டில் இருந்துள்ளார். வயிறு வலி வந்ததைத் தொடர்ந்து அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பிரசவம் நடந்தது தெரிய வந்தது.


இதுகுறித்து பேரூர் அனைத்து மகளிர் போலீசார்சிறுமியை திருமணம் செய்து கர்ப்பமாக்கிய கோபாலகிருஷ்ணன்மீது வழக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில் தலைமறைவான அவரை கைது செய்ய போலீசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# மயிலாடுதுறை: மனநலம் பாதித்த இளைஞர் மீட்பு; கண்ணீர் மல்க ஆரத்தழுவி கொண்ட தாய்

மயிலாடுதுறை, ஏப்.21

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில் சாலையில் சுற்றி திரிந்த கடலூரை சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவரை தன்னார்வலர் ஒருவர் மீட்டு அவருடைய பெற்றோரிடம் ஒப்படைத்திருக்கிறார். மகனை நேரில் கண்டதும் அவருடைய தாய் கண்ணீர் மல்க ஆரத்தழுவி கொண்டார்.

இந்தகாட்சிகள்சுற்றியிருந்தோரை நெகிழ்ச்சியடைய செய்தன. இதன் பின்னர், அந்த இளைஞருக்கு முகச்சவரம் செய்து, குளிக்க வைத்து புது ஆடை அணிவிக்கப்பட்டது. அவருடைய தாய், சகோதரி உள்ளிட்ட குடும்பத்தினருடன் தன்னார்வலர் ஒன்றாக புகைப்படமும் எடுத்து கொண்டார்.



இது தொடர்பான காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன.

# தூத்துக்குடி: பெண்ணை பாலியல் வன்புணர்ச்சி செய்ய முயன்றவர் குண்டர் சட்டத்தில் கைது

தூத்துக்குடி, ஏப்.21

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின்பேரில், கழுகுமலை பகுதியில் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்ச்சி செய்ய முயற்சித்த வழக்கில் சம்பந்தப்பட்ட கயத்தாறு, கெச்சிலாபுரம் பகுதியைச் சேர்ந்த குமாரசாமி மகன் செந்தில் மள்ளர் (47) என்பவரை நேற்று கழுகுமலை காவல் நிலைய போலீசார் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்துசிறையில்அடைத்தனர்.

# வெள்ளியங்கிரி மலையேறிய இளைஞர் தவறி விழுந்து சாவு

கோயம்புத்தூர், ஏப்.21

கோவையை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி பூண்டி அடிவாரத்தில் வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் உள்ளது. இந்த கோவில் அடிவாரத்தில் இருந்து சுமார் 6 ஆயிரம் அடி உயரத்தில் 7வது மலையில் சுயம்புலிங்க சுவாமி உள்ளது. இந்த மலையில் உள்ள சுயம்பு லிங்க சுவாமியை தரிசிக்க ஆண்டுதோறும் பிப்ரவரி முதல் மே மாதம் வரை பக்தர்கள் அனுமதிக்கப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டும் கடந்த பிப்ரவரி மாதம் 1ந் தேதி முதல் பக்தர்கள் மலையேறி சாமி தரிசனம் செய்து வருகின்றனர். அந்த வகையில் தூத்துக்குடியைச் சேர்ந்த புவனேஷ்வரன் (18



வயது) என்ற இளைஞர் தனது நண்பர்களுடன் வெள்ளியங்கிரி மலை யேறி உள்ளார். இந்த நிலையில் சாமி தரிசனம் முடித்து விட்டு மலையில்இருந்து இறங்கும்போது, ஏழாவது மலையில் இருந்து புவனேஷ்வரன் கால் தவறி சுமார் 10 மீட்டர் ஆழத்தில் உருண்டு விழுந்துள்ளார். இதில் படுகாயம் அடைந்த அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக ஆலாந்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

21.4.2025

# 4 வழிச்சாலை மேம்பால பணி காரணமாக தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை போக்குவரத்து மாற்றம்: காவல்துறை அறிவிப்பு

சென்னை, ஏப்.21

தேனாம்பேட்டை – சைதாப்பேட்டை வரை 4 வழிச்சாலை மேம்பாலம் அமைக்கப்பட்டு வருவதால் இன்று முதல் 3 நாட்களுக்கு சோதனை அடிப்படையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுவதாக போக்குவரத்து காவல்துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை போக்குவரத்து காவல்துறை வெளியிட்ட அறிக்கை: தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலான 4 வழிச் சாலைக்கான மேம்பால கட்டுமான பணிகள் நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படுவதால் மேற்படி பணி நடைபெறும் இடங்களில் இன்று முதல் (20ம் தேதி) முதல் 22ம் தேதி வரை 3 நாட்களுக்கு சோதனை அடிப்படையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படும்.

அதன்படி, தேனாம்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும் செனடாப் சாலை, டர்ன்புல்ஸ் சந்திப்பு வழியாக திருப்பிவிடப்பட்டு, சேமியர்ஸ் சாலையில் (பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சாலை) வலதுபுறம் திரும்பி நந்தனம் சந்திப்புக்குச் சென்று தங்கள் இலக்கை அடையலாம். சைதாப்பேட்டையில் இருந்து சேமியர்ஸ் சாலை நோக்கி வரும் அனைத்து வாகனங்களும் தடை செய்யப்படும். அதற்கு பதிலாக இவ்வாகனங்கள் அண்ணாசாலை, செனடாப் சாலை வழியாகச் சென்று பின்னர் சேமியர்ஸ் சாலை வழியாக தங்கள் இலக்கை அடையலாம்.

ஜி.கே.எம். பாலம் செனடாப் சாலையில் இருந்து வரும் வாகனங்களுக்கு மட்டும் ஒரு வழிப் பாதையாக மாற்றப்படும். மேலும் காந்தி மண்டபம் சாலையில் இருந்து வரும் வாகனங்களுக்கு அனுமதி இல்லை. இதேபோல், ரத்னா நகர் பிரதான சாலையும் செனடாப் சாலையில் இருந்து ஒரு வழிப்பாதையாக இருக்கும். அண்ணாசாலையில் இருந்து செல்ல அனுமதி இல்லை. மேலும் அண்ணாசாலையில் இருந்து செனடாப் 1வது தெருவில் இருந்து செல்லும் வாகனங்கள் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் செனடாப் 1வது பிரதான சாலையில் இருந்து செல்ல அனுமதி இல்லை.

கோட்டூர்புரத்தில் இருந்து செனடாப் சாலை வழியாக தேனாம்பேட்டை நோக்கி வரும் வாகனங்கள் தடை செய்யப்படும்.

அதற்கு பதிலாக இவ் வாகனங்கள் இடதுபுறம் ஜி.கே.எம். பாலம் சர்வீஸ் சாலையில் சென்று டர்ன்புல்ஸ் சந்திப்பு, சேமியர்ஸ் சாலை, நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம். சீரான போக்குவரத்திற்காக அண்ணா சாலை, செனடாப் சாலை, சேமியர்ஸ் சாலை மற்றும் அதைச் சுற்றியுள்ள ஒருவழிப் பாதைகளில் வாகனங்கள் நிறுத்துவதற்கு தடை செய்யப்படும்.

# தமிழ்நாடு அரசுக்கு எதிராக போராடுவதாக போஸ்டர் அடித்து நாடகமாடுவதா? திமுக மாணவர் அணி எடப்பாடிக்கு கண்டனம்

சென்னை, ஏப்.21

தமிழ்நாடு அரசுக்கு எதிராகபோராடுவதாகபோஸ்டர் அடித்து நாடகம் ஆடுவதா என்று எடப்பாடிக்கு திமுக மாணவர் அணி கண்டனம் தெரிவித்துள்ளது.

திமுக மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ்காந்தி நேற்று வெளியிட்ட அறிக்கை: நீட் தேர்வைக் கொண்டுவந்தது பாஜ. நீட் தேர்வுக்கு விலக்கு கொடுக்க மறுப்பது பாஜ. நீட் தேர்வு மூலம் தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவை காவு வாங்குவது பாஜ. நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடு அரசு கொண்டுவந்த தீர்மானத்தை திருப்பி அனுப்பியது பாஜ.

இப்படி நீட் தேர்வு எனும் பயங்கரவாதத்தின் மூலம் தமிழ்நாடு மாணவர்களின் வாழ்க்கையைக் கேள்விக்குள்ளாக்கும் பாஜவுக்கு எதிராகச் சட்ட ரீதியாகவும் களத்திலும் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு. ஆனால், எடப்பாடி பழனிசாமியோ தமிழ்நாடு அரசுக்கு எதிராகபோராடுவதாகபோஸ்டர் அடித்து நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறார். உண்மையில் அதிமுகவின் இந்த செயல் நாடகம் அல்ல பகல் வேஷம். பதவிக்காக அமித்ஷாவின் கால்களைப் பற்றிக் கொண்டிருக்கும் பழனிசாமி தன் எஜமான பாசத்தை காட்ட இன்னும் என்னவெல்லாம் நாடகம் ஆடப் போகிறார் என்பதை பார்க்கத்தானே போகிறோம்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# முதுகலை ஆசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டு பயிற்சி மே 5ல் தொடக்கம்: மாநில கல்வியியல் ஆராய்ச்சி இயக்குனரகம் தகவல்

சென்னை, ஏப்.21

முதுகலை ஆசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டு பயிற்சி மே.5ம் தேதி தொடங்க உள்ளதாக மாநில கல்வியியல் ஆராய்ச்சி இயக்குனரகம் தெரிவித்துள்ளது. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குனரகம் சார்பில், அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்பயிற்சிநிறுவனத்தால் 202526ம் கல்வியாண்டு முதல், முதுகலை ஆசிரியர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி நடத்த முடிவு செய்யப்பட்டது. அந்த வகையில், அரசு பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு திறன்வளர் பயிற்சி வழங்கும் பொருட்டு கட்டகம் தயாரிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது.




வருகிற மே மாதம் 5ம் தேதி முதல் முதுகலை ஆசிரியர்களுக்கானபணித் திறன் மேம்பாட்டு பயிற்சி சென்னை நுங்கம்பாக்கம் பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் தொடங்கப்பட உள்ளது. மே மாதம் 16ம் தேதி வரை நடைபெறும் பயிற்சியில் முதுகலை ஆசிரியர்கள் பங்கேற்கும் வகையில், குறிப்பிட்ட நாட்களுக்கு அவர்களுக்கு பணி விடுப்பு வழங்க மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பயிற்சி பங்கேற்கும் ஆசிரியர்கள், தங்கள் பாடத்திற்கான பாடப் புத்தகங்களை எடுத்து வர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# உலகுக்கே ஞானம் வழங்கியது தமிழ் மண்; அரசுப்பள்ளியில் படித்து உச்சநீதிமன்ற நீதிபதி ஆனேன்: நீதிபதி மகாதேவன் பெருமிதம்

சிவகாசி, ஏப்.21

அரசுப் பள்ளியில் படித்து உச்சநீதிமன்ற நீதிபதியாகியுள்ளேன் என சிவகாசியில்நடைபெற்ற கல்லூரி விழாவில் நீதிபதி மகாதேவன் பெருமிதத்துடன் தெரிவித்தார். விருதுநகர் மாவட்டம் சிவகாசி பி.எஸ்.ஆர் கல்லூரியில் 25வது ஆண்டு விழா நேற்று மாலை கல்லூரியின் தாளாளர் சோலைச்சாமி தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக உச்ச நீதிமன்ற நீதிபதி மகாதேவன் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது: நான் சாதாரணமான அரசு பள்ளியில் தான் எனது கல்வி பயணத்தைதொடங்கினேன். கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்தி எனது வாழ்க்கையில் அடுத்தடுத்த கட்டங்களுக்கு சென்றேன்.



27 ஆண்டுகளாக வழக்கறிஞராக பணியாற்றினேன். அதனைத் தொடர்ந்து 10 ஆண்டுகள் அரசு வக்கீலாக பணியாற்றினேன். 11 ஆயிரம் வழக்குகளை நடத்தி உள்ளேன். உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றி உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றேன். தமிழ்படித்த என்னால் இந்த உயரத்தை தொட முடிகிறது என்றால் நீங்களும் முயற்சித்தால் சாதனைகளை செய்யலாம். வாழ்க்கையின் கடினமான பாதைகளை 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் புலவர்கள் உணர்ந்திருக்கின்றனர். தமிழ் மண் தான் உலகத்துக்கே ஞானத்தை வாரி வழங்கியது. தமிழகத்தில் இருந்த சித்த மருத்துவ கூறுகள், வெளிநாட்டு அறிஞர்களால் எடுத்து ஆளப்பட்டு அவர்கள் மூலமாக அது மருத்துவத்துறையில் கலந்துள்ளது.

நாம் படிக்கும் சிந்தனைகள், தத்துவங்கள் அனைத்தும் மேல்நாட்டு சிந்தனைகள் தத்துவங்கள் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் நம் மண்ணிலிருந்து சென்றவை தான் அவை. ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளலாம். அதே நேரத்தில் கற்க வேண்டிய காலத்தில் கற்க வேண்டியதை கற்க வேண்டும். இவ்வாறு கூறினார். நிகழ்ச்சியில் முன்னாள் டிஜிபி ராதாகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பல்லடத்தில் 3 பேர் கொலை: சிறை கைதியிடம் சிபிசிஐடி விசாரணை

திருப்பூர், ஏப்.21

பல்லடத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்ட விவகாரத்தில் கோவை சிறை கைதியிடம் சிபிசிஐடி போலீசார் விசாரித்து வருகின்றனர். திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே சேமலைக்கவுண்டம்பாளையத்தை சேர்ந்த தெய்வசிகாமணி (78), அவரது மனைவி அலமேலு (75), மகன் செந்தில்குமார் (46) ஆகியோர் கடந்த ஆண்டு நவம்பர் 28ம் தேதி தோட்டத்து வீட்டில் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில், டிஜிபி உத்தரவின்படி, கோவை மண்டல சிபிசிஐடி எஸ்.பி. □தேவி தலைமையில் கடந்த மார்ச் 21ம் தேதி முதல் விசாரணையை தொடங்கினர்.



இதற்கிடையே, தஞ்சை மாவட்டம் வல்லம் பகுதியை சேர்ந்த ராமச்சந்திரன் என்பவர் வழிப்பறி வழக்கில் கைது செய்யப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீது சந்தேகம் ஏற்பட்டதால் போலீசார் அவரை காவலில் எடுத்து கடந்த 2 நாட்களாக பல்லடம் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

# விஜய் சேதுபதி நடித்த 'டிரெயின்' படம்.. அப்டேட் கொடுத்த தயாரிப்பாளர் தாணு




விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகியுள்ள 'டிரெயின்' படத்தில் நடிகை சுருதிஹாசன் , நரேன் ஆகியோர் பிரதான பாத்திரத்தில் நடிக்கின்றனர். இயக்குநர் மிஷ்கின் இயக்கும் 'டிரெயின்' படத்தை கலைப்புலி எஸ்.தாணுவின் 'வி கிரியேஷன்ஸ்' நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்திற்கு இயக்குநர் மிஷ்கினே இசையமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒரே இரவில் ரெயிலில் நிகழும் சம்பவத்தின் பின்னணியில் டார்க் திரில்லர் ஜானரில் 'டிரெயின்' படம் உருவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த படத்தில் நடிகை சுருதிஹாசன் பாடல் ஒன்றை பாடியிருப்பதாக சொல்லப்படுகிறது. மேலும் டார்க் திரில்லர் ஜானரில் உருவாகியுள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு ஏற்கனவே நிறைவடைந்து தற்போது பின்னணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இப்படம் குறித்து தயாரிப்பாளர் தாணு சமீபத்தில் நடந்த பேட்டி ஒன்றில் பேசியுள்ளார். அதன்படி அவர், "டிரெயின் படத்தின் போஸ்ட் புரோடக்சன் பணிகள் நடைபெற்று வருகிறது. இயக்குனர் மிஷ்கின்தான்இந்தபடத்தில்இசைஅமைத்திருக்கிறார்.மிரட்டிஇருக்கிறார்.அவர்மிகப்பெரியஆத்மார்த்தமான கலைஞன். தொழில் பக்தி உள்ள கலைஞன். இந்தியாலயே எல்லோரும் டிரெயின் ஷெட் போட்டு இருப்பாங்க. அதில் 3 கம்பார்ட்மெண்ட் மட்டும்தான் போட்டு இருப்பாங்க. நாங்க இந்த படத்துல 8 கம்பார்ட்மென்ட் வரைக்கும் போட்டு இருக்கோம். சுருதிஹாசனின் பெர்பார்மன்ஸ் பெரிய அளவில் பேசப்படும். விஜய் சேதுபதி வாழ்ந்து இருக்காரு. இது சீட் நுனியில் உட்கார்ந்து பார்க்கக்கூடிய படம்" என்று தெரிவித்துள்ளார்.

# மம்முட்டியின் 'களம்காவல்' படத்தின் செகண்ட் லுக் அப்டேட்




மலையாள சினிமாவின் முன்னணி நட்சத்திர நடிகர்களுள் ஒருவர் மம்முட்டி. சமீபத்தில் இவரது நடிப்பில் 'பசூக்கா' என்ற படம் வெளியானது. டீனா டென்னிஸ் இயக்கிய இப்படத்தினை மம்முட்டியின் சொந்த தயாரிப்பு நிறுவனமான 'மம்மூட்டி கம்பெனி' தயாரித்தது. இப்படம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

அதனை தொடர்ந்து மம்முட்டி புதிய படம் ஒன்றில் நடித்து வருகிறார். இப்படத்திற்கு 'களம்காவல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தில் மம்முட்டியுடன் இணைந்து விநாயகன் முக்கியக் கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். குரூப், ஒஷானா படங்களுக்குக் கதை எழுதிய ஜிதின் கே ஜோஷ் இந்தப் படத்தை இயக்குகிறார்.

இந்த படத்தில் மம்முட்டி இதுவரை பார்த்திராத கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். இந்தப் படம் இந்த ஆண்டின் இறுதிக்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், 'களம்காவல்' படத்தின் செக்ண்ட் லுக் போஸ்டர் குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி, நாளை காலை 11.11 மணியளவில் வெளியாக உள்ளது.

# டெல்லிக்கு எதிரான வெற்றி... இவர்களுக்கு தான் பாராட்டுகள் கொடுக்க வேண்டும் சுப்மன் கில்

ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த டெல்லி 20 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 203 ரன்கள் மட்டுமே எடுத்தது. டெல்லி தரப்பில் அதிகபட்சமாக அக்சர் படேல் 39 ரன் எடுத்தார். குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா 4 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து 204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய குஜராத் 19.2 ஓவரில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 204 ரன் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக ஜாஸ் பட்லர் 97 ரன் எடுத்தார்.

இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது பட்லருக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில், இந்த போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் குஜராத் கேப்டன் சுப்மன் கில் அளித்த பேட்டியில் கூறியதாவது, ஒரு கட்டத்தில் டெல்லி 220 230 ரன்களை இலக்காக நிர்ணயம் செய்வது போல் தெரிந்தது. அப்போது நாங்கள் மீண்டும் போட்டியை இழுத்துக் கொண்டு வந்ததற்கான பாராட்டுகள் எங்களுடைய பவுலர்களை சேரும்.

முதல் போட்டியிலும் கிட்டத்தட்ட 245 ரன்களை துரத்திய நாங்கள் 10 ரன்கள் வித்தியாசத்தில் மட்டுமே தோற்றோம். அந்த வகையில் நன்றாக சேசிங் செய்யும் நாங்கள் பாதுகாப்பாக விளையாடுகிறோம். அவர்கள் முன்னோக்கி சென்ற போது அக்சர் பட்டேல் பேட்டிங் செய்த சமயத்தில் வேகப்பந்து வீச்சாளர்களை அடிப்பது கடினமாக இருந்தது.


எனவே, அதை மாற்றாமல் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவது சரியாக இருக்கும் என்று நினைத்தோம். பேட்டிங்கில் நான் ரன் அவுட்டானாலும் இன்னும் நிறைய போட்டிகள் இருப்பதால் எனக்கு வாய்ப்பு கிடைக்கும். பட்லர் ரூதர்போர்ட் ஸ்ட்ரைக்கை மாற்றி மாற்றி, அடித்து ஆடிய விதம் அற்புதமாக இருந்தது. அது குருட்டுத்தனமான ஹிட்டிங் கிடையாது. சூழ்நிலையை கணக்கிட்டு அவர்கள் மிகவும் நேர்த்தியாக பேட்டிங் செய்ததைப் பார்த்தது விருந்தாக அமைந்தது. இந்த வெற்றியால் மகிழ்ச்சி. இவ்வாறு அவர் கூறினார்.

# டெல்லிக்கு எதிரான வெற்றி... இவர்களுக்கு தான் பாராட்டுகள் கொடுக்க வேண்டும் சுப்மன் கில்

ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த டெல்லி 20 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 203 ரன்கள் மட்டுமே எடுத்தது. டெல்லி தரப்பில் அதிகபட்சமாக அக்சர் படேல் 39 ரன் எடுத்தார்.

குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா 4 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து 204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய குஜராத் 19.2 ஓவரில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 204 ரன் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக ஜாஸ் பட்லர் 97 ரன் எடுத்தார். இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது பட்லருக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில், இந்த போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் குஜராத் கேப்டன் சுப்மன் கில் அளித்த பேட்டியில் கூறியதாவது, ஒரு கட்டத்தில் டெல்லி 220 230 ரன்களை இலக்காக நிர்ணயம் செய்வது போல் தெரிந்தது. அப்போது நாங்கள் மீண்டும் போட்டியை இழுத்துக் கொண்டு வந்ததற்கான பாராட்டுகள் எங்களுடைய பவுலர்களை சேரும். முதல் போட்டியிலும் கிட்டத்தட்ட 245 ரன்களை துரத்திய நாங்கள் 10 ரன்கள் வித்தியாசத்தில் மட்டுமே தோற்றோம். அந்த வகையில் நன்றாக சேசிங் செய்யும் நாங்கள் பாதுகாப்பாக விளையாடுகிறோம். அவர்கள் முன்னோக்கி சென்ற போது அக்சர் பட்டேல் பேட்டிங் செய்த சமயத்தில் வேகப்பந்து வீச்சாளர்களை அடிப்பது கடினமாக இருந்தது. எனவே, அதை மாற்றாமல் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவது சரியாக இருக்கும் என்று நினைத்தோம். பேட்டிங்கில் நான் ரன் அவுட்டானாலும் இன்னும் நிறைய போட்டிகள் இருப்பதால் எனக்கு வாய்ப்பு கிடைக்கும். பட்லர் ரூதர்போர்ட் ஸ்ட்ரைக்கை மாற்றி மாற்றி, அடித்து ஆடிய விதம் அற்புதமாக இருந்தது. அது குருட்டுத்தனமான ஹிட்டிங் கிடையாது. சூழ்நிலையை கணக்கிட்டு அவர்கள் மிகவும் நேர்த்தியாக பேட்டிங் செய்ததைப் பார்த்தது விருந்தாக அமைந்தது. இந்த வெற்றியால் மகிழ்ச்சி. இவ்வாறு அவர் கூறினார்.

# குஜராத்துக்கு எதிரான தோல்விக்கு இதுதான் காரணம் டெல்லி கேப்டன் அக்சர் படேல்



ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த டெல்லி 20 ஓவர்களில் 8 விக்கெட்டை இழந்து 203 ரன்கள் மட்டுமே எடுத்தது. டெல்லி தரப்பில் அதிகபட்சமாக அக்சர் படேல் 39 ரன் எடுத்தார்.

குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா 4 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து 204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய குஜராத் 19.2 ஓவரில் 3 விக்கெட்டை மட்டும்இழந்து204ரன்எடுத்து7விக்கெட்வித்தியாசத்தில் அபாரவெற்றிபெற்றது. குஜராத்தரப்பில்அதிகபட்சமாக ஜாஸ் பட்லர் 97 ரன் எடுத்தார்.

இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது பட்லருக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில், இந்த போட்டியின் தோல்வியைப் பற்றி அதிகம் யோசிக்க மாட்டோம் என டெல்லி கேப்டன் அக்சர் படேல் கூறியுள்ளார். போட்டி நிறைவடைந்த பின்னர் அக்சர் படேல் அளித்த பேட்டியில் கூறியதாவது,

நாங்கள் 10 முதல் 15 ரன்கள் குறைவாக எடுத்து விட்டோம். அது தான் இறுதியில் வித்தியாசத்தை ஏற்படுத்தியது.ரன்வேகத்தைஅதிகரிக்கமுயற்சிக்கும்போதெல்லாம்நிலைத்துநின்றுஆடியபேட்ஸ்மேன்களின் விக்கெட்டை இழந்தோம். இதனால் எங்களது உத்வேகம் பாதிக்கப்பட்டதுடன் விரும்பியது போல் முடிக்க முடியவில்லை.

கடைசி ஓவரில் இரண்டு, மூன்று பவுண்டரிகள் அடித்து இருந்தால் பவுலிங்கின் போது அவர்களை கட்டுப்படுத்தி இருக்கலாம். நாங்கள் நன்றாக பந்து வீசினோம். பீல்டிங்கில் சற்று நன்றாக செயல்பட்டு இருந்தால் சிறப்பாக இருந்து இருக்கும்.

நாங்கள் குறைவான இலக்கை நிர்ணயித்து விட்டோம். தோல்வியைப் பற்றி அதிகம் யோசிக்க மாட்டோம். நாங்கள் இன்னும் என்ன செய்து இருக்க முடியும் என்பதை கற்றுக்கொள்ள வேண்டும். அடுத்த முறை இதே தவறை செய்யக்கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.